2. கவன ஈர்ப்பு.

அ. சென்னை கொருக்குப்பேட்டையில் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 54-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், டி. மணி, என். வரதராஜன், கே. ஆர். சுந்தரம், மு. அம்பிகாபதி, பொ. விஜயராகவன், இ. முத்துராமலிங்கம், இரா. தாமரைக்கனி, டாக்டர் கோ. சமரசம் ஆகியோர், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சொரணம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னை கொருக்குப் பேட்டையில் 2—7—1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 300-க்கும் மேற்பட்ட குடிசைகள் நாசமடைந்தது குறித்து"

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 2—7—1980 அன்று இரவு 7-30 மணிக்கு சென்னை கொருக்குப் பேட்டையிலுள்ள ஜீவா நகர், பாரதி நகர் மற்றும் மீனாம்பாள் நகர் ஆகிய இடங்களில் எதிர்பாராது ஏற்பட்ட தீ விபத்தில் 333 குடியிருப்புகள் முழுவதும் சேதமடைந்தன. உயிர்ச்சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பீடு சுமார் ரூபாய் 1 இலட்சம். தீ விபத்திற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அருகிலுள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சியினரால் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட 333 குடும்பங்களுக்கு தலா ரூ. 200 வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசியும், ஒரு வேட்டியும், ஒரு புடவையும் வழங்கப்பட்டது.

முற்பகல் 9-10]

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, உங்கள் மூலம் நான் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கத்தைக் கேட்டுப் பெற விரும்புகிறேன்.

1980 ஜூலை 14] (திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்)

கொருக்குப்பேட்டையில் மட்டும் அல்ல, தொடர்ந்து பல இடங்களில் இப்படி நடந்து கொண்டுவருகிறது. ஆகவே, குடிசைப் பகுதிகளின் பக்கத்தில் தீ அணைப்பு நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தீ விபத்துக்கள், பரந்த தமிழ்நாட்டில் எங்கெங்கோ றபடுகின்றன. எல்லாயிடங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் வைப்பதற்கு அந்த அளவிற்கு நம் வரவு—செலவுத் திட்டம் அனுமதிக்கவில்லை. ஆனால், கூடுமானவரையில் முக்கியமான நகரங்களில், முக்கியமான பகுதிகளிலெல்லாம் தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. மற்ற இடங்களில் ஏற்படுவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. டி. மணி : 2—7—1980-ல் ஏற்பட்ட தீ விபத்தில் நாசமடைந்த வீடுகளுக்கு புது வீடுகள் கட்ட உதவி எந்தளவில் செய்யப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இதற்கு முன்னால் ரூ. 100 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், மறுமுறை இந்த அமைச்சரவை வந்த பிறகு 9—6—1980-க்குப் பின்னால் எங்கெங்கு தீ விபத்துக்கள் ஏற்படுகிறதோ எல்லோருக்கும் ரூ. 200 கொடுக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : இப்போது ஏறியிருக்கிற விலைவாசிக்கு இந்த ரூ. 200 என்பதைக் கொண்டு கீற்று போட முடியாது. ஆகவே, ரூ. 500-ஆவது கொடுப்பதற்கு அரசு முன்வருமா ? ஏனென்றால், இப்போது கீற்று, மூங்கில் இவற்றின் விலைகள் எல்லாம் ஏறியிருக்கின்றன. ஆகவே, பாதி எரிந்தால் ரூ. 200, முழுவதும் எரிந்தால் ரூ. 500 என்று கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : 9—6—1980-க்கு முன்னால் ரூ. 100 கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றைக்கு அதற்குப் பிறகு—ஏழாவது மாதம் நடந்துகொண்டிருக்கிறது—இப்போது ரூ. 200, அதாவது ஒன்றுக்கு இரண்டு 100 சதவீதம் ஏற்றியிருக்கிறோம். ஆனால், விலைவாசி 100 சதவீதம் ஏறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : இது போன்ற தீ விபத்துக்கள் ஆங்காங்கு மாநிலம் முழுவதும் ஏற்பட்டுக் கொண்டு வருவதால் குடிசைகள் கட்டி இருக்கிற இடங்களில் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

[1980 ஜூலை 14

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இது பற்றிய ஆய்வு அரசின் கவனத்தில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : இந்த கவன ஈர்ப்பின் மீது நான் கேள்வி கேட்பதற்கு முன்னால் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஒரு உறுப்பினர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மேல் கொடுக்கக்கூடாது என்றிருக்கிறது. திரு. விஜயராகவன் அவர்கள் இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். நாகர்கோவிலில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் குறித்தும், கொருக்குப்பேட்டை தீ விபத்து குறித்தும் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஈஸ்வரமூர்த்தியின் பெயரோடு அவர் பெயர் இணைக்கப் பெற்றிருக்கிறது. நீங்கள் உங்களது கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொருக்குப்பேட்டையில் தீ பிடித்தவர்களுக்கு 200 ரூபாய் உதவித் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை அங்கே குடியிருப்பவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், அங்கே குடியிருப்பவர்களுக்கு கிடைக்காமல், அது வீட்டு முதலாளிகளுக்குப் போய் சேர்ந்திருக்கிறது. கொத்தடிமை போன்று குடியிருப்பவர்கள் வாங்கியவுடன் அந்த ரூபாயை அப்படியே அந்த வீட்டு முதலாளிகள் வாங்கிக்கொண்டு விட்டார்கள். அதனால், இந்தத் தொகை குடிசைவாசிகளுக்கு கிடைக்கும்படியும், வீட்டு முதலாளிகளுக்கு லோன் என்ற முறையில் தனியே கொடுப்பதற்கும் வழி செய்ய இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இம்மாதிரியான தவறுகள் அங்கே நடந்துவிடக்கூடாது என்பதற்காக அங்குள்ள எல்லோரையும் கூட்டிவைத்து ஒலிபெருக்கி வைத்து, அந்தப் பணம் யாருக்கு என்பது விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பல இடங்களில் அரசு அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எங்காவது தவறு நடந்திருந்தால் அதைக் கண்டுபிடித்து நீக்குவதற்கும் இந்த அரசு முயற்சி செய்யும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற தீப்பிடிப்பு சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில் இதைக் குறைப்பதற்கு வேறு என்ன காரணம் என்பதை ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா? இந்த சூழ்நிலையை மாற்றியமைக்க ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு முன்வருமா?

1980 ஜூலை 14]

மாண்புமிகு திரு எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தீப் பிடிக்காமல் இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதைக் குறைக்க வேண்டும் என்பதற்காகத்தான் அடிக்கடி ஒலிப்பெருக்கி மூலம் அங்குள்ள தாய்மார்களைப் பார்த்து, நீங்கள் அடிக்கடி உலையை வைத்துவிட்டு, கடைக்குச் சென்றுவிடுகிறீர்கள், அப்போது காற்றடித்து அந்த குடிசையும், பக்கத்து குடிசைகளும் 20, 100 என்று குடிசைகள் தீப்பிடித்து, லட்சக்கணக்கான ரூபாய்கள் பாழாகின்றது. நீங்கள் செய்யக்கூடிய இந்த சிறிய தவறினால் இப்படியெல்லாம் ஏற்படுகிறது என்பதை விளக்கிக் கொண்டிருக்கிறோம். மேலும் அவர்களை எஜுகேட் பண்ண வேண்டும் என்று வருவாய்த் துறை அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

(ஆ) நாகர்கோயிலில் நெசவுத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு நடத்தும் போராட்டம்.

திரு மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் கூலி உயர்வு கேட்டு ஆயிரக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதால் அங்கு நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நாகர் கோவிலில் உள்ள 50 மாஸ்டர் வீவர்களின்கீழ் வேலை செய்யும் சுமார் 5,000 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் 1979–80-ம் ஆண்டுக்கு 25 சதவீத போனஸ் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 28–6–1980 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நாகர்கோவில் நகர ஜவுளி உற்பத்தியாளர் சங்கம் மற்றும் குமரி மாவட்ட வேட்டி உற்பத்தியாளர்கள் சங்கம், நாகர்கோவில் ஆகிய சங்கங்கள் நிர்வாகத்தின் தரப்பில் பிரதிநிதிகளாக செயல்படுகின்றன. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் ஐந்து தொழிலாளர்களின் பிரதிநிதிகளாகச் செயல்பட்டு வருகின்றன.

நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் முன் ஏற்கனவே நடந்த பேச்சு வார்த்தை பலனளிக்கவில்லை. ஆகையால் மேற்கொண்டு மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையர்